

ஸ்ரீ லெட்சுமி நரசிம்மர் மடம்



சிந்தனைக் கவிஞர் சித.சிதம்பரத்தின்
தொலை நோக்குப் பார்வையில் ...
பாரோர் பத்துப் பயனுற வழங்குவோர்
இல்லம் முத்துப்பட்டணம்

வரலாறு

ஸ்ரீ

ஸ்ரீ லெட்சுமி நருஸிம்ஹ பரப்பிரம்மனே நம :

சிவகங்கை மாவட்டம் " தென் திருப்பதி " - அரியக்குடியில்

ஸ்ரீ லெட்சுமி நரசிம்மர் - சக்கரத்தாழ்வார் சன்னதி - ஸ்ரீ மடம்

வரலாறு



வெளியீடு :

அரியக்குடி சக்கரத்தாழ்வார் டிரஸ்ட்

ஸ்ரீ

ஸ்ரீ லெட்சுமி நருஸிம்ஹ பரப்பிரம்மனே நம :

சிவகங்கை மாவட்டம் " தென் திருப்பதி " - அரியக்குடியில்

ஸ்ரீ லெட்சுமி நரசிம்மர் -

சக்கரத்தாழ்வார் சன்னதி - ஸ்ரீ மடம்

வரலாறு

" சங்கத்தை பார்த்தவளும் பேசும் பேச்சில்
தமிழ் கொஞ்சும் இதயத்தின்தாபம் விஞ்சும்
சிங்கத்தின் வடிவில் இறைவந்த செய்தி
செப்புகின்ற கவிதையிலே நாமும் காண,
இங்கந்த " நரசிங்கன் " எழுந்திருப்பான் !
இடியாக ஒலித்(து) உடலம் சிலிர்த்து நிற்போம்
அங்கங்கள் குறுகிவிட வணங்கி நிற்போம்
அனுபவங்கள் அதிசயங்கள் விளைந்து நிற்கும் ! "

" ஓம் நமோ நாராயணா "

ஸ்ரீ லெட்சுமி நரசிம்மர் சன்னதி - ஸ்ரீ மடம் சுமார் 80 - 90 ஆண்டுகளுக்கு முன்னர் மாடபூசி மடம் ஸ்ரீனிவாசாச்சாரியார் அவர்களால் ஸ்தாபனம் செய்யப்பெற்று பிரதிஷ்டை செய்யப்பெற்றது. அஹோபில மடம் ஜீயர் சுவாமிகள் பாதயாத்திரை வரும் போது, தங்கள் பரிவாரங்களுடன் ஓரிரு நாட்கள் தங்கி, பக்தர்களுக்கு ததீயாராதனை செய்து ஆசீர்வதிக்க ஏதுவாக இந்த மடம் நிறுவப்பெற்றது. திருமலை திருப்பதியில் ஸ்ரீ திருவேங்கடம் உடையான் ஆலயத்திற்கு அருகில், " ஸ்ரீ ஆதிவராக சுவாமி ஆலயம் " இருப்பது போல, தென்திருப்பதியாம் அரியக்குடியில் " ஸ்ரீலெட்சுமி நரசிம்மர் " சன்னதி - மடம் உள்ளது.

திருமலையில் " ஸ்ரீ வராக சுவாமியை " தரிசித்த பின்னர் ஸ்ரீ நிவாசப் பெருமாளை தரிசிப்பதைப் போல இங்கும் " ஸ்ரீ லெட்சுமி நரசிம்மரை" தரிசித்த பின்னர் ஸ்ரீநிவாசப் பெருமாளை மக்கள் தரிசித்து வந்தனர்.

ஸ்தாபகர்களான " மடத்தார்கள் " காலப் போக்கில் உத்தியோகநிமித்தம் ஊர் விட்டு இடம் பெயர்ந்து பல ஊர்களுக்கு சென்றதினால் சரியான பரிபாலனம் இல்லாமல் ஸ்ரீ லெட்சுமி நரசிம்மர் சன்னதி மடம் புயலில் விழுந்து, சிதைந்து தரைமட்டமாகி விட்டது. இருப்பினும், கற்பகிரகமும், "நரசிம்மர் ", "ஆதிவன்சடகோபன்" மூலவர், உற்சவர்

விக்ரஹங்களும் அன்றிருந்த படி அளவில், அழகில் குறையாமல், ஒளியுடன் இருந்தன. 1954க்கு முன்பு கால பூசைகள் மிகவும் சிறப்பாக நடைபெற்றன. தீப தூப அலங்காரங்களுடன் ஒளிமயமாக விளங்கியது. இங்குள்ள மூலவர் பெயர் "ஸ்ரீ லெட்சுமி நரசிம்மர்". மூலவர் மிக அழகான வேலைப்பாடு நிறைந்த கருங்கல் விக்கிரகமாகும். உற்சவர் ஐம்பொன்னாலான சிறிய விக்கிரஹம் மிகவும் அழகிய அமைப்புடையது. இங்குள்ள ஸ்ரீஆச்சாரியன் பெயர் "ஆதிவன் சடகோபன்" என்பதாகும். இவரது மூலவிக்கிரஹம் கருங்கல்லாலும், உற்சவர் பஞ்சலோகத்தாலும், ஒளிமயமாக காட்சி தருகிறார்கள்.

நாற்பத்தி மூன்றாவது பட்டம் தேவனார் விளாகம் சுவாமிகளும், நாற்பத்தி நாலாவது பட்டம்ஸ்ரீ முக்கூர் சுவாமிகளும், எழுந்தருளி ஆசி கூறி, பூசைகள் நடத்திய இடம் இது. மடத்துக்கு சுவாமிகள் எழுந்தருளி இருந்த காலத்தில், "சம்ஹாஸ்ரேயனம்" வெகு விமரிசையாக நடைபெற்றது. புரட்டாசி மாதத்தில் பத்து நாள் உற்சவமும், தேசிகர் புறப்பாடும் அதி விமரிசையாக நடந்தது உண்டு. ததீயாராதனை வெகுஜோராக நடந்தது.

இந்த மடத்துக்கு என்று எந்தவித பொருளாதார வசதியுமில்லை. உண்டியல் கிடையாது. அதனால்

வருமானம் இல்லை. பக்தர்களின் நலனுக்காகவும், அரியக்குடி ஒரு பெரிய வழிபாட்டுத் தலமாக திகழவேண்டும் என்பதற்காகவும் இந்த மடம் கட்டப் பெற்றது. மாடபூசி ஸ்ரீனிவாசச்சாரியாரின் குடும்பத்தினரால் உருவாக்கப்பெற்று பின்னர் 1954 புயலால் சிதைவு அடைந்தது.

கடந்த நாற்பது ஆண்டுகளாக அரியக்குடி திருவேங்கடம் உடையான் திருக்கோயில் ஒளி இழந்து, பொலிவு குன்றி, மக்கள் அலை குறைந்ததை தொடர்ந்து, இந்த சன்னதி - மடமும் அதன் வழியே நடக்கத் தொடங்கியது.

ஸ்ரீ நரசிம்மர் சன்னதியையும் புனர்நிர்மாணம் செய்து, கும்பாபிஷேகம் நடத்த வேண்டும் என்று பல வருடங்களாக முயற்சி செய்தும் நிதி வசதி இல்லாத காரணத்தால் செய்ய முடியவில்லை.

பல பக்தர்கள் இந்த சன்னதியை - மடத்தை புனர்நிர்மாணம் செய்வதற்காக ஏற்பாடுகளை தொடங்குங்கள் எங்களால் இயன்ற நிதியுதவி செய்கின்றோம் என்று கூறி உற்சாகப்படுத்தியதை தொடர்ந்து, பகவானை பிரார்த்தித்துக்கொண்டு திருப்பணியைத் தொடங்கினோம்.

மாடபூசி ஸ்ரீநிவாசாச்சாரியாரின் வாரிசுகளில் ஒருவரான, பினாங்கு ஸ்ரீனிவாசராகவன் அவர்களின் பெரும் கொடையாலும், பொதுமக்களின் காணிக்கையாலும், அரியக்குடி பெருமாள் டிரஸ்டின் உதவியாலும், பெருமுயற்சியாலும், "ஸ்ரீமடம்", 22-8-1998ம் நாள் பாலாலயம் செய்யப்பெற்று, திருப்பணி வேலைகள் தொடங்கப்பெற்றது. முன்பு ஸ்ரீசக்கரத்தாழ்வார் சன்னதி இந்த மடத்தில் இல்லை. 1998ம் ஆண்டு ஆலயம் மறுபடியும் நிர்மானிக்கப்பெற்றபொழுது, புதுவயல் சித. பழமலைக்கண்ணன் மனைவி பார்வதி ஆச்சி சக்கரத்தாழ்வார் கல்சிலை நன்கொடையாக தந்தார்கள். சக்கரத்தாழ்வார் பிரதிஷ்டையானார். 17-6-1999 தேதி அன்று அகோபில மடம் 45ம் பட்டம் ஸ்ரீமத் அழகியசிங்கர் சுவாமிகள் முன்னிலையில் இரு சன்னதிகளுக்கும் குடமுழுக்கு விழா வெகு விமரிசையாக நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

மதுரை ஆறுமுகம் செட்டியார் என்பவரின் நன்கொடையால் ஐம்பொன்னால் ஆன சக்கரத்தாழ்வார் உற்சவமூர்த்தி பிரதிஷ்டை செய்யப்பெற்றுள்ளார்.

மாடபூசி, ஸ்ரீனிவாசாச்சாரியார் அவர்களால் ஸ்தாபனம் செய்யப்பெற்ற இந்த சன்னதி மடம் அவர் சந்ததியினர் ஒத்துழைப்புடன் தற்சமயம் அரியக்குடி சக்கரத்தாழ்வார் டிரஸ்ட் என்ற அமைப்பினால் சிறப்பாக நிர்வகிக்கப்பெறுகிறது.

" பிரதோஷ வழிபாடு "

ஸ்ரீ லெட்சுமி நரசிம்மருக்கு ஒவ்வொரு பிரதோஷத்தன்றும் மிகவும் சிறப்பான முறையில் அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. இரணியனை நரசிம்மர் வதம் செய்தார். அதனால் அந்த பிரதோஷ காலத்தில் நரசிம்மருக்கு விஷேச நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. வருடத்தில் வரும் 25 பிரதோஷங்களிலும் சிறப்பாக திருமஞ்சனம் செய்து, ஆடைஆபரணம் அணிவித்து, புஷ்ப அலங்காரம் செய்து ஆராதிக்கப்படுகிறது. அங்கு குழுமி இருக்கும் பக்தர்களுக்கு பிரசாதமும் வழங்கப்படுகிறது. இந்த கைங்கரியத்தை பக்தர்களே தங்கள் நேர்த்திக்கடனாக, பிரார்த்தனையாக செய்து வருகின்றனர். பக்தர்களின் வேண்டுதல்களை உடனுக்குடன் ஸ்ரீ லெட்சுமி நரசிம்மர் நிறைவேற்றி வைக்கிறார். பக்தர்களும் தங்கள் வேண்டுதல் நிறைவேறிய பின்பு சிரத்தையுடன் தங்கள் பிரதோஷ கால ஆராதனைகளை செய்கின்றனர். இந்த வழிபாடு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. நரசிம்மருக்கு கல்கண்டு பானகம் மிகவும் பிரியம். தினசரி பக்தர்களின் வேண்டுதலாக, பானகம் செய்து வினியோகிக்கப்படுகிறது.

" சுதர்ஸன ஹோமம் "

அதுபோலவே, இங்கு எழுந்தருளி உள்ள ஸ்ரீ சக்கரத்தாழ்வார் சக்திவாய்ந்தவர், பராக்கிரமசாலி. பக்தர்களின் மனச்சஞ்சலங்களையும், துன்பங்களையும் நீக்கி ஊக்கத்தையும், உற்சாகத்தையும் கொடுப்பவர். பக்தர்களின் வேண்டுதல்கள் நிறைவேறுவதால் பக்தர்கள் மனம் மகிழ்ந்து, தங்கள் நன்றியை "சுதர்ஸன ஹோமம்" செய்வதன் மூலம் வெளிப்படுத்துகின்றனர். இந்த சன்னதியில் அடிக்கடி சுதர்ஸன ஹோமம் நடைபெறுகிறது. இந்த ஹோமம் செய்வதற்கு வேண்டிய அனைத்து வசதியும் இங்கே உள்ளதால் பக்தர்கள் சிரமம் இன்றி செய்யமுடிகிறது.

" உற்சவங்கள் "

"சதுர்த்தசி திதியும்", "சுவாதி நட்சத்திரமும்", "மஹா பிரதோஷமும்" சேர்ந்த நாளே "ஸ்ரீ லெட்சுமி நரசிம்மர்" ஜெயந்தி நாளாகும். அன்று விசேஷ பூசைகள் ஆராதனைகள் நடைபெறுகின்றன.

புரட்டாசி மாதம் கேட்டை நட்சத்திரத்தன்றும் விசேஷ பூசைகள் ஆராதனைகள் நடைபெறுகின்றன. புரட்டாசி கேட்டை நட்சத்திரம் என்பது அகோபில மடம் ஸ்தாபகர் "ஆதிவண்சடகோபன்" திருநட்சத்திரம் ஆகும்.

ஆவணி மாத "ஹஸ்த நட்சத்திரம்" அன்றும் வைகாசி மாத "விசாக நட்சத்திரம்" அன்றும் திருமஞ்சனம் செய்து வேதபாராயணம், பிரபந்தங்களுடன் சுவாமி புறப்பாடு நடைபெறுகிறது.

சக்கரத் தாழ்வாருக்கு அவரது நட்சத்திரமான சித்திரை நட்சத்திரம் அன்று திருமஞ்சனமும் சிறப்பு வழிபாடும், ஸ்ரீ சக்கரத்தாழ்வார் உற்சவ மூர்த்தி புறப்பாடு சிறப்பாக நடைபெறுகிறது.

ஸ்ரீலெட்சுமி நரசிம்மருக்கும், ஸ்ரீ சக்கரத்தாழ்வாருக்கும் வருடப்பிறப்பு, புரட்டாசி சனிக்கிழமை, ஐப்பசி மாதம் பவித்ரோ உற்சவம், தீபாவளி, வைகுண்ட ஏகாதசி, சங்கராந்தி போன்ற விசேஷ நாட்களிலும் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன.

ஸ்ரீ லெட்சுமி நரசிம்மரையும், ஸ்ரீ சக்கரத்தாழ்வாரையும் ஒருசேர, பக்தி சிரத்தையுடன் மனமார பிரகாரம் வந்து, தேங்காய், வாழைப்பழம், கல்கண்டு, வெண்ணெய் இவைகளை ஸமர்பித்து அர்ச்சனை செய்தால் நினைத்த காரியம் கைகூடும்.

தினம் 12 பிரகாரம் வீதம் 48 நாட்களுக்கு பிரகாரம் வந்தால், எல்லா காரியங்களும் தங்கு தடையின்றி நிறைவேறும்.

ஒவ்வொரு புதன்கிழமையும், 12 பிரகாரம் வீதம் 9 புதன்கிழமை பிரகாரம் வந்தால் அஷ்ட ஐஸ்வர்யங்களும் சேரும்.

ஒவ்வொரு சனிக்கிழமையும் 12 பிரகாரம் வீதம் 9 சனிக்கிழமை பிரகாரம் வந்தால் சகல விதமான பீடைகளும், தோஷங்களும், ரோகங்களும், கஷ்டங்களும் நிவர்த்தியாகும்.

ஒவ்வொரு பிரதோஷத்தன்றும், நரசிம்மருக்கு பானகம் படையல் செய்து, பக்தர்களுக்கு வினியோகம் செய்வது நரசிம்மரை திருப்திப்படுத்துவதாகும். அவ்வாறு செய்தால் நினைத்த காரியம் கைகூடும்.

செட்டிநாட்டில் ஸ்ரீலெட்சுமி நரசிம்மருக்கும் சக்கரத்தாழ்வாருக்கும் என தனிச் சன்னதி - மடம் அமைந்துள்ளது இங்கு மட்டும் தான், இரு பராக்கிரமசாலிகளையும் ஒருசேர தரிசிப்பது என்பது மிகவும் சிறப்பு. அத்தகைய சிறப்புடைய ஆலயத்திற்கு பக்தர்கள் அதிக அளவில் வருவது ஆலய

பராமரிப்பாளர்களான சக்கரத்தாழ்வார் டிரஸ்ட் அமைப்பாளர்களுக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது.

ஸ்ரீ லெட்சுமி நரசிம்மருக்கு "பிரதோஷ" வழிபாடு செய்யவும், ஸ்ரீ சக்கரத்தாழ்வாருக்கு "சுதர்சன ஹோமம்" செய்யவும் "நித்தியப்படி அர்ச்சனைக்கட்டளை" செய்யவும் விரும்பும் பக்தர்கள் கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளலாம். விபரங்களுக்கு : செயலாளர், அரியக்குடி சக்கரத்தாழ்வார் டிரஸ்ட், "நாராயண விலாஸ்", 122, மெ.மெ. வீதி, காரைக்குடி - 1. தொலைபேசி எண். 438393.

" ஓம் நமோ நாராயணா "

ஸ்ரீ சுதர்சனம்

அஞ்சல் அஞ்சல் அஞ்சல் என்று
தஞ்சமுற்ற பக்தர் நெஞ்சில்
அச்சம்யாவும் போக்கும் சக்கரம் !
அந்தி சந்தி உச்சிவேளை
எந்த வேளை ஆனபோதும்
முந்தி வந்து காக்கும் சக்கரம்
வஞ்சமாமன் கம்சனோடு
மஞ்சன் சிசு பாலனையும்
மண்ணிலிட்டுத் தேய்க்கும் சக்கரம் !
மறைகள் தேடி அறியொணாத
இறைவனார் வலத்து நின்ற
மகிமை கொண்ட ஸ்ரீ சுதர்சனம் 1

திசைகள் பத்தும் நடுநடுங்க
விசையில் மேரு மலைகுலுங்கச்
சிகை விரித் தெழுந்த சக்கரம்
தீயும், நீரும், மண்ணும், காற்றும்
ஓயுமாறு கால்பரப்பித்
திகுதிகுத் தெழுந்த சக்கரம் !
வசைகள் பத்துத் தலைசுமந்த
அசுரன்ராவ ணேசனைத்தன்
வாயிலிட்டுத் தின்ற சக்கரம்
மறைகள் தேடி அறியொணாத
இறைவனார் வலத்து நின்ற
மகிமை கொண்ட ஸ்ரீ சுதர்சனம் ! 2

சங்கு, வாள், உலக்கை, தண்டு
அங்குசம், கலப்பை, செண்டு
தனுசு, வஜ்ரம், பாசம், தோமரம் !
தன்மழு, உடுக்கை, குந்தம்,
மணி, கமண்டலம், பதாகை !
சக்தியோடு, சூலம், கேடயம் -
மங்குமாறு கோடிகோடி
செங்கதிர் உதித்த ஜோதி
வாய்த்ததேவ தேவன் சக்கரம் !
மறைகள்தேடி அறியொணாத
இறைவனார் வலத்து நின்ற
மகிமைகொண்ட ஸ்ரீசுதர்சனம் ! 3

ஆயிரம் சிரங்களோடும்
ஆயிரம் கரங்களோடும்
ஆயிரம் முகம்கொள்சக்கரம் !
ஆழி, தீ, புயல் வெடிக்கும்
ஊழியாய்ப் பகைமுடிக்கும்
ஆற்றலால் வலம்கொள்சக்கரம் !
வாயினால் உரைத்தகாலை
மனதினால் நினைத்தவேளை
வந்தருள் நலம்கொள் சக்கரம் !
மறைகள்தேடி அறியொணாத
இறைவனார் வலத்துநின்ற
மகிமைகொண்ட ஸ்ரீசுதர்சனம் ! 4

யந்த்ர தந்த்ர மந்திரமும்,
எதிர்க்கும் அஸ்த்ர சஸ்த்ரமும்,
எடுத்தெறிந்து சாடும் சக்கரம்
இடி, மழை, வெயில், நெருப்பு,
பிணி, விடம், கடல், பொருப்(பு)
இமைப்பில் துண்டு போடும்சக்கரம் !
மந்தன், வெள்ளி, பொன், புதன்
குஜன், நிலா, கதிர், அரா
வருத்திடா தருள்செய்சக்கரம் !
மறைகள்தேடி அறியொணாத
இறைவனார் வலத்துநின்ற
மகிமைகொண்ட ஸ்ரீசுதர்சனம் ! 5

ஆறுகோண ரூபம், வேறு
வேறுகோர, தேகம், பீஜம்
ஆன க்லீம் அணைந்தசக்கரம் !
அலைகடல் குடித்து, வானில்
வெயிலையும், மறைத்துமுன்னம்
அல்லலைக் களைந்தசக்கரம் !
மாறிலா அறம்தழைக்க
ஊழிதோறும் பூமியில்
வரும்வரும் சுழன்றுசக்கரம் !
மறைகள்தேடி அறியொணாத
இறைவனார் வலத்துநின்ற
மகிமைகொண்ட ஸ்ரீசுதர்சனம் ! 6

துதிபுரிந்த அடியவர்க்(கு)
எதிர்புரிந்த பகையெலாம்
தொலைக்கவந்து தோன்றும் சக்கரம் !
துட்டர், ஏவல் செய்வினை.
துரத்தும்பேய், விலங்கையும்
துவட்டி நம்மைத் தாங்கும் சக்கரம் !
மதிபுரிந்த கவிலயத்தில்
ஜதிபுரிந்தெ ழுந்துலாவி
வருகஸ்ரீ தரன்கைச்சக்கரம்
மறைகள்தேடி அறியொணாத
இறைவனார் வலத்துநின்ற
மகிமைகொண்ட ஸ்ரீசுதர்சனம் 7

பூசும் நீற்றில் ஏறியும் !
புசிக்கும் நீரில் கூடியும்,
புகுந்தநோய் ஒழிக்கும் சக்கரம் !
போற்றுவார் இடம் - வலத்தில்,
ஆற்றலாய் அகம் - புறத்தில்,
பொன், பொருள், குவிக்கும்சக்கரம் !
வாசமாலை தூபதீபம்
நேசமாய் உவந்துகொள்ள
வருகநார ணன்கைச்சக்கரம் !
மறைகள்தேடி அறியொணாத
இறைவனார் வலத்துநின்ற
மகிமைகொண்ட ஸ்ரீசுதர்சனம் ! 8

எங்கும்வெற்றி எதிலும் வெற்றி
ஈடிலாத பெரியவெற்றி
என்றும்வெற்றி ஆக்கும்சக்கரம் !
இன்பமுண்டு சேமமுண்டு
லாபமுண்டு யோகமுண்டு
ரட்சைதந்து காக்கும்சக்கரம் !
மங்கலம் தனங்கள் தான்யம்
தங்கம்வைரம் பால்பசுக்கள்
மக்கள்சுற்றம் சேர்க்கும் சக்கரம் !
மறைகள்தேடி அறியொணாத
இறைவனார் வலத்துநின்ற
மகிமைகொண்ட ஸ்ரீசுதர்சனம் ! 9

ஆழிவண்ண மாயம்கையில்
ஐம்படைக்கும் முன்படை
அநந்தசக்தி ஸ்ரீசுதர்சனம் !
ஆதிஅந்தம் அற்றமுக்கண்
ஜோதியோ டடைந்தவர்க்(கு)
அருள்சுரக்கும் ஸ்ரீசுதர்சனம் !
வாழிவாழி வாசுதேவன்
வாழிஆழி யான் ஈசன்
வாழிவாழி ஸ்ரீசுதர்சனம் !
மறைகள்தேடி அறியொணாத
இறைவனார் வலத்துநின்ற
மகிமைகொண்ட ஸ்ரீசுதர்சனம் ! 10



Designed & Printed at Thirumagal, ✆ : 438881